# உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு இல்லை

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 9
இதழ் 118

தபாற் பெட்டி எண் : 49
போன் 889

National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 26 ஸபர் 29 வெள்ளிக்கிழமை [9-6-67]

## "பதுக்கல் செய்தால் கடும் நடவடிக்கை"

கொழும்பு, வியாழன்

மேற்கு ஆசியாவில்தோன்றியுள்ள யுத்தநெருக்கடி நிலைமையைச் சாதகமாகக் கொண்டு இங்குள்ளவர்த்தகர்கள் உணவுப்பொருட்களையும் மற்றும் அத்தியாவசியப்பொருட்களையும் பதுக்கல்செய்தும்கொள்ளைலாபம் சம்பாதிக்கவும் எத்தனித்தால் அத்தியாவசியப் பொருள் களுக்கு கட்டுப்பாட்டு விலைத்திட்டம் கொண்டு வரப்படும் என உணவு இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள் களுக்கு இப்போது தட்டுப் பாடு இல்லையென்றும் அரிசி, சீனி, மாவு ஆகியனவை போதிய அளவு கையிருப்பி லிருப்பதாகவும் உணவு இலாகா அதிகாரி தெரிவித் தார்.

பதுக்கல் கொள்ளை லாபம் முதலியவைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள்மீது கடும் நட வடிக்கை எடுக்கப்படும் என வும் அவர் எச்சரித்தார்.

# எகிப்து எதிர்த்தாக்குதல், சினய் பகுதியில் கடும் போர்

## விமான நடவடிக்கைகளில் பிரிட்டன் பங்குபற்றவில்லை

### ஐ. நா. விசாரணை கமிஷன் நியமிக்குமாறு கோரிக்கை

லண்டன், ஜூன் 8

அரபு நாடுகளுக்கெதிரான விமான நடவடிக்கைகளில் பிரிட்டிஷ் விமானங்களும் பங்கு பற்றியதாக ஐ. அ. குடியரசு சுமத்திய குற்றச் சாட்டை பிரிட்டன் நிரா கரித்திருந்தது தெரிந்ததே.

இப்போது பிரிட்டன், மத் திய தரைக் கடற்பகுதியில் உள்ள தனது விமானதாங்கி நிலையங்களை வந்து பரிசோதிக்குமாறு, ஐ. நா. வை கேட்டுள்ளது. ஐ. நா. விசக் ரணைக் கமிஷன் ஒன்றை அனுப்புமாறு அது கேட்டி ருக்கிறது.

**தடை நீக்க முடிவு**

மேற்கு ஆசிய நாடுகளுக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்வதற்கான தடைகளை நீக்குவதென பிரிட்டன் தீர் மானித்துள்ளது.

## போதிய மண்எண்ணை கையிருப்பில் உண்டு

### பெட்ரோலியம் கூட்டுத்தாபன அதிகாரி தெரிவிக்கிறார்

கொழும்பு, வியாழன்

இன்னும் பல மாதங்களுக் குத் தேவையான மண் எண்ணை கையிருப்பிலிருப் பதாக இலங்கைப் பெட் ரோலியம் கூட்டுத்தாபனத் தின் அதிகாரி ஒருவர் இன்று தெரிவித்தார்.

பாவனையாளர்களுக்கு மண்எண்ணை கிடைப்பதில் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வும், கடைக்காரர்கள் தம் மிடம் இருக்கும் எண்ணை யைப் பதுக்கி வைத்துக் கொண்டுள்ளதாதவும் கூறப் பட்ட செய்தியைத் தொடர்ந்தே அதிகாரி இவ்விதம் அறிவித்துள்ளார்.

பாவனையாளர்களுக்கு மண்எண்ணை வழங்க மறுக் கும் ஏஜெண்டுகளுக்கும், சில்லறை வியாபாரிகளுக் கும் எதிராகக் கடும் நட வடிக்கை எடுக்கப்படுமென பெட்ரோலியம் கூட்டுத் தாபனம் எச்சரித்துள்ளது.

எதிர்காலத் தேவைக்கான எண்ணை பெறுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட் டுள்ளதாகப் பெட்ரோலி யம் கூட்டுத்தாபனம் தெரி வித்துள்ளது.

## அல்ஜியர்ஸ் படைகளும் சண்டையில் இறங்கின

### ஜோர்டானில் யுத்த நிறுத்தம்

லண்டன், ஜூன் 8

சினய் பாலைவனப் பிரதேசத்தில் ஐக்கிய அரபுக் குடியரசுப் படைகள் இஸ்ரேல் துருப்புகள் மீது கடுமையான எதிர்த்தாக்குதல் ஒன்றை இன்று ஆரமபித்துள்ளன. சூயஸ் கால்வாயிலிருந்து சுமார் 40 கிலோமீட்டர் தொலைவில் இந்த எதிர்த்தாக்குதல் நடைபெற்ற தாக கெய்ரோ வானொலி அறிவித்தது

ஐக்கிய அரபுக்குடியரசு படைகள் ஆரமபித்துள்ள உக்கிரமான இந்த எதிர்த்தாக்குதலுக்குப் பக்கபலமாக அல்ஜீரிய மிக் விமானங்க ளும வந்துசேர்ந்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது. 20 இஸ்ரே லிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாகவும இஸ்ரேலுக்குப் பல த்த சேதங்கள் விளைவிக்கப்பட்டதாகவும கேய்ரோ வானொலி கூறியது.

**அல்ஜீரிய படைகள்**

அல்ஜீரியா இன்று முதல் தடவையாக இஸ்ரேலுக்கெதிராகத் தாக்குதலில் இறங்கி யுள்ளது.

ஐ. நா. வின் பாதுகாப்புச்சபை போர்நிறுத்தம் செய்யும்படி விடுத்த இரண்டாவது கோரிக்கையையும் இன்று ஐக்கிய அரபுக்குடியரசு, குவைத், அல்ஜீரியர்ஸ், சிரியா, ஈரான், ஈராக் ஆகிய நாடுகள் நிராகரித்துவிட்டன. இதுவரை ஜோர்டான் மட்டுமே போர்நிறுத்தம் செய்துள்ளது.

**டுனீஷியா போர்க்கோலம்**

டுனீஷியா எல்லையில் சுமார் 1500 போர் வீரர்கள் எகிப்திய படைகளுடன் சேர்ந்துகொள்வதற்காக ஆயுதங்களுடன் காத்துநிற்பதாக அறிவிக்கப்பட்டது

மத்தியதரைக்கடல் பிரதேசம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இஸ்ரேல் பிரிவு ஒன்றை எகிப்திய படைகள் அல்அரிஷ் என்ற இடத்தில் நிர்மூலமாக்கி யுள்ளன.

[6-ம் பக்கம் பார்க்க]

## கொஸிஜினுக்கு நாசர் செய்தி

கெய்ரோ, ஜூன், 8

ஐக்கிய அரபுக் குடிய ரசு அதிபர் கேணல் நாசர் சோவியத் பிரத மர் கொஸிஜினுக்கு தனிப்பட்ட முறையில் ஒரு செய்தி அனுப்பியி ருக்கிறார். அதன் விபரம் தெரியவில்லை. கெய் ரோவிலுள்ள சோவி யத் தூதர் மூலம் இச் செய்தி கொஸிஜினுக்கு அனுப்பப்பட்டது.

## பிரதமர் கனடா செல்வார்

கொழும்பு, வியாழன்

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா கெய்ரோ போகும் உத்தேசம் கைவிடப்பட்டபோதிலும் கனடாவுக்கும் ஜப்பானுக் கும் போவார் என்று இப் போது அறிவிக்கப்பட்டுள் ளது.

பிரதமமந்திரி கனடா அர சாங்கத்தின் [illegible] மீது அங்கு [illegible] கிறார். மொன்ட்ரியால் க

[6-ம் பக்கம் பார்க்க]

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்றுக் கம்பஹாவில் இழுக்கப்பட்ட 145-வது தேசிய சுவீப்பின் முடிவுகள் வருமாறு;-

**முதலாவது பரிசு**

23 T 0071 ரூபா 100,000

**இரண்டாவது பரிசு**

50 L 0131 ரூபா 40,000

**மூன்றாவது பரிசு**

26 R 0194 ரூபா 10,000

தலா ரூபா 1,177 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 31 C 0205 | 45 R 0715 |
| 21 X 0925 | 33 V 0205 |
| 10 [illegible] | [illegible] 0?10 |
| 05 E 0862 | 27 K 0819 |
| 40 E 0207 | 49 H 0285 |

(6-ம்பக்கம் பார்க்க)

**ஆலயப் பிரவேச வழக்கு**

## 'அர்ச்சனை சமான்களுடன் வந்தவர்களை வெளியே தள்ளினர்'

வல்வெட்டித்துறை வியா.

''தொண்டமானாறு செல் வச்சந்நிதிஆலயத்தை ஆக்கி கட்டியவர்கள் ''செட்டி'' மார் வகுப்பைச் சேர்ந்த வர்கள், ஆனல் தற்பொழுது மருதர் கதிராமர் சந்ததி யினர் பராமரித்தும், பூஜை செய்தும் வருகிறார்கள், அவர்கள் மீனவ வகுப்பைச் சேர்ந்தவர்கள்.''

இவ்வாறு ஆறுமுகம் நட ராசா என்பவர் பருத்தித் துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலை யில் இன்று காலை ஆலயப் பிரவேசவழக்கு விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது மேற்கண்ட வாறு கூறினர்.

இவ்வழக்கு தொண்ட மானாறைச் சேர்ந்த முரு கன் இலக்குணன் என்ப வர் இவ்வருடம் மாசி மாதம் 17-ந் திகதி தான் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத் திற்காக தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தி குள் உட்பிரவேசிக்கவிடாது பலாத்காரமாகத் தடுத்த தாக அதே இடத்தைச் சேர்ந்த க. தங்கவேலுஐயர் த. சிவசுப்பிரமணியஐயர் ஆகிய இருவர்மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ் வழக்கை பார்ப்பதற் காக ஏராளமானவர்கள் கோர்ட்டின் உள்ளேயும்

[8-ம் பக்கம்பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாமாக எதுவும் செய்கிறோமென்று நினைக்கும் போதுதான் நமக்கு சந்தேகங்கள் வரும். செய்வது சரியோ தவறோ என்பது புரிவதில்லை. இறைவனின் விருப்பத்துக்கே பூரணமாக நாம் சரணாகதியடைந்து அவன் கையில் நம்மை ஒப்புவித்துவிட்டால், ஆணவம்முற்றிலும் அடங்கி, அவர் காட்டும்வழியிலேயே செல்வோம். வருந்துவதற்கு ஒன்றும் இராது.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கவருஷ வைகாசி மீ 26உ (9-6-67)


## மேற்கு ஆசியா

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புச் சபை ஒருமனதாக விடுத்த வேண்டுகோளை ஐக்கிய அரபுக் குடியரசும் ஈராக், சிரியா போன்ற இதர அரபு நாடுகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஜோர்டான் மட்டும்இந்த வேண்டுகோளை ஏற்று யுத்தத்தை நிறுத்தியுள்ளது. ஆயினும் இஸ்ரேலியர்எகிப்தியபிரதேசமான காஸாவையும் கைப்பற்றி சூயஸ் கால்வாயையும் சமீபித்திருக்கும் இச்சமயத்தில் ஐக்கிய அரபுக் குடியரசு போர்நிறுத்தத்துக்குச் சம்மதிக்குமென எதிர்பார்க்க முடியாது. இதற்கு எகிப்து இணங்கினால் எகிப்து தனது சுயாதிபத்தியத்தை இழந்து இஸ்ரேலிடம் சரணாகதியடைந்ததாகவே முடியும். இதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையும் உடந்தையாக இருந்ததாகவே கருத இடமேற்படும்.

அக்காபாவளைகுடாவை இஸ்ரேலின் கப்பல் போக்குவரத்து ஐக்கிய அரபுக் குடியரசு மூடியதுதான் மேற்கு ஆசியாவில் இன்று நடைபெறும் உக்கிரமான போருக்கு முக்கிய காரணம். இஸ்ரேலியரும் எகிப்தியரும் போருக்குத் தயாராக இருந்த போதிலும் இஸ்ரேலியர்தான் முதலில் திடீர்த் தாக்குதலை நடத்தியிருக்கிறார்களென்பதற்கு அவர்கள் சூயஸ் கால்வாய்வரை துரிதமாக முன்னேறியிருப்பது சான்று பகரும்.

எகிப்தின்மீது தாக்குதல் நடத்தி எவ்வளவு விரைவில் சூயஸ்வரை சென்று அக்காபா குடாவையும் கைப்பற்றி அவர்களின் கப்பல் போக்குவரத்துக்குள்ள தடையை நீக்கிவிட முடியுமோ அந்த அளவுக்குச் சென்றுவிட்டால் அதன்பின் ஐ. நா.வின் தலையீட்டையோ வேறு சமரச முயற்சியையோ ஏற்றுக்கொள்ளலாமென்பதுதான் இஸ்ரேலியரின் நோக்கமாக இருந்திருக்கிறது. அக்காபா குடாவின் ஒரு முனையான ஷரம் அல் ஷெயிக் நகரை இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ளனர். தங்கள் நோக்கம் நிறைவேறிவிட்டதென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதன்பின்னர் யுத்தத்தை நிறுத்தத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இச்சமயத்தில் எகிப்து போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொள்வதைவிட தோல்வியை ஒப்புக் கொள்ளலாம். யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றிய ஐ. நா. பாதுகாப்புச் சபை யுத்த நிறுத்தத்துடன் இருதரப்பு படைகளும் பழைய நிலைக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்றும் கூறியிருந்தால் நியாயமிருக்கும். படைவிலக்கம்பற்றி எதுவும் குறிப்பிடாது யுத்தத்தை நிறுத்தும்படி கேட்டிருப்பது ஆக்கிரமிப்புக்கு ஆதரவளிப்பதாகும்.

இஸ்ரேலும் அரபுநாடுகளும் ஐ. நா.வில் அங்கம் வகிக்கின்றன. ஐ. நா.வின் தீர்மானத்தை அவை மதித்து நடக்க வேண்டும். மதித்து நடப்பதற்கு ஐ. நாவின் தீர்மானமும் நியாயமானதாக இருக்க வேண்டும்.

யுத்தத்தை நிறுத்துவதுடன் இருதரப்பு படைகளும் பழைய நிலைக்கு அதாவது சோவியத் யூனியன் கூறுவதுபோல் 1949-ம் ஆண்டிலிருந்த நிலைக்கு விலக்கப்பட வேண்டும். சமாதான முயற்சிக்கு இந்தியாவின் உதவியையும் இஸ்ரேல் கேட்டிருப்பதால், யுத்தத்தை நிறுத்தி படைவிலக்கம் ஏற்பட்டதும் அரபுநாடுகளின் நட்பையும் பெற்றுள்ள இந்தியா இஸ்ரேல் - அரபு பிரச்னைக்கு ஒரு சமரச முயற்சியை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இஸ்ரேலியர்களின் உரிமைகளையும் அரபியர்களின் உரிமைகளையும் மதிக்கக்கூடிய முறையில் ஒரு சமரசத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். மேற்கு ஆசிய நாடுகளுக்கு வல்லரசுகள் எதுவும் ஆயுத உதவி அளிக்காமல் தடுக்கப்பட வேண்டும். இதுவே அமைதிக்கு வழி.

---

உலகின் கவனத்தை ஈர்த்துள்ள

# இஸ்ரேல் தேசம்

மேற்கு ஆசியாவில் இப்போது சண்டையில் முன்னேறியுள்ள இஸ்ரேல் நாட்டின் வரலாறு, பரப்பு, ஜனத்தொகை, அரசியல் முதலிய விவரங்களைப் பற்றி உற்று இங்கே கவனிப்போம்.

இஸ்ரேல் குடியரசு ஏற்பட்டது 1948ம் வருடம் மே மாதம், 14ந் திகதி தான். அதாவது, இருபது வருடங்கள்கூட ஆகவில்லை. இதன் விஸ்தீரணம் சுமார் எண்ணாயிரம் சதுரமைல். இலங்கையின் அளவில் மூன்றில் ஒரு பங்குதான். ஜனத்தொகை 26 லட்சம்.

### சரித்திர வரலாறு

கிறிஸ்தவ வேதமான பைபிளில் இஸ்ரேல் மக்களென்றும், பாலஸ்தீன், ஜெருஸலம் என்றெல்லாம் வரும் பிரதேசம் தான் இது. கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் யூத மதத்தைச் சேர்ந்த சாதியினர் சரித்திரப் புகழ்பெற்ற பாலஸ்தீனில் வசித்து வந்தார்கள். கிறிஸ்துவுக்குப் பின் 70 ஆண்டு கழித்து அதாவது 1900 வருடங்களுக்கு முன்பாக ரோமர்கள் படையெடுத்து வந்து அவர்களை கி. பி. 137ல் அங்கிருந்து விரட்டிவிட்டனர். பாலஸ்தீனம் தங்களது புராதன இடமென்றும் அங்கு தங்களுக்கு மீண்டும் குடியேற உரிமை வேண்டுமென்றும் ஓர் இயக்கம் ரஷ்யாவிலிருந்த டாக்டர் வீஸ்மென் என்ற யூதரால் ஆரம்பிக்கப்பட்டது. 1917ம் வருஷத்திலே பிரிட்டிஷ் மந்திரிசபை பால்பர் பிரகடனத்தின் மூலம் இந்த யோசனைக்கு ஆதரவளித்தது.

ஜெர்மனியிலே ஹிட்லரின் கொடுங்கோலாட்சி ஏற்பட்டபோது அங்கிருந்து ஏராளமான யூதர்கள் பாலஸ்தீனத்தில் தஞ்சம் புகுந்தார்கள். அச்சமயம் முதல் உலக யுத்த உடன்படிக்கையின்படி, பாலஸ்தீனம் பிரிட்டனின் பாதுகாப்பு ஆதிக்கத்தில் இருந்தது. அங்கு யூதர்களை வெளியிலிருந்து குடியேற்றுவதை அரபு மக்கள் பலமாக ஆட்சேபித்தனர். என்றாலும் பிரிட்டன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிக யூதர்களை அங்கு குடியேற்றிவந்தது. பாலஸ்தீனத்தின் 'மாண்டேட்' ஏற்பாட்டின்படி, அந்நாடு 1922ம் வருடம் பிரிக்கப்பட்டது. ஐந்தில் நான்கு பங்கு 'டிரான்ஸ் ஜோர்தான்' என்ற பெயரில் தனியாகப் பிரிக்கப்பட்டது. அது இப்போது ஜோர்தான் ராஜ்யம் என்று விளங்குகின்றது.

1948ம் வருடம் அக்டோபர் மாதம் 1ம் திகதிக்குள் எஞ்சிய பாலஸ்தீனத்தை இரு சுதந்திர நாடுகளாகப் பிரிப்பதென்று ஐக்கிய நாடுகள் சபை 1947ம் வருடம் தீர்மானித்தது. இதில் 'அரபு ராஜ்யத்'தின் பரப்பு 4500 சதுரமைல் ஆனால் இது ஏற்படவேயில்லை. ஜெருஸலம் [289 சதுர மைல்] தனியாக ஐ. நா. நியமிக்கும் ஒரு கவர்னரால் நிர்வகிக்கப்படும். பிரிட்டிஷ் துருப்புகளை அப்பகுதியிலிருந்து வாபஸ் பெற்று, தனியாக இரு அரசாங்கங்களைத் தெரிவு செய்வதென்பது ஏற்பாடு. பிரிட்டன் தனது 'மாண்டேட்' அதிகாரத்தை 1948ம் வருடம் விட்டது.

அதேவருடம் மே மாதம் 14ம் திகதி புதிய யூதர் ராஜ்யமான இஸ்ரேல்குடியரசுபிரகடனமாயிற்று. ஜெருஸலம் புதியநகரத்தை இஸ்ரேலும் பழைய நகரத்தை ஜோர்தானும்கைப்பற்றின. ஜெருஸலத்தை சர்வதேச பொதுப் பிரதேசமாக்க வேண்டுமென்றுஐ. நா.ஸ்தாபனம்தீர்மானித்தது. ஆனால் இவ்விரு அரசுகளும் அதற்கு ஆதரிக்கவில்லை. 1949ம் வருடம் மே மாதம் இஸ்ரேல் ஐ. நா. சபையின் மெம்பராகத்தெரிவுசெய்யப்பட்டது.

### அரபு எதிர்ப்பு

ஆரம்ப முதலே அரபு லீக் இஸ்ரேலை எதிர்த்தது. அத்துடன் அந்நாட்டைப் பொருளாதார பகிஷ்காரத்துக்கும் உட்படுத்தியது. சிரியா, எகிப்து, ஈராக்; லெபனன், ஸவுதி அரேபியா, ஜோர்டான் இவை, இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தின. பாலஸ்தீனத்தில் வசித்துவந்த சுமார் பத்து லட்சம் அரபு மக்கள் தங்கள் இடத்திலிருந்து விரட்டப்பட்டு நாடற்றவர்களாகத் தவிக்கின்றனர். அவர்களுக்கு ஐ. நா. உதவி வழங்கி வருகிறது. 'அரபு ராஜ்யத்'துக்காக ஒதுக்கப்பட்ட 450 சதுரமைல் பூமியையும், ஜோர்டானும் எகிப்தும் பங்குபோட்டுக்கொண்டன.

1949ல் பல அரபுநாடுகளுடன் தனித்தனி சண்டை நிறுத்த ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது. என்றாலும் பொதுவான சமாதான [illegible] இஸ்ரேலை பொருளாதார பகிஷ்காரத்துக்கு உட்படுத்தியதுடன், சூயஸ் வழியையும் அதற்குத் தடுத்தது.

தென்மேற்கிலுள்ளகாஸா கடற்கரைப் பகுதியையும், சினாய் பகுதியையும் 1956ம் வருடம் நவம்பர் 4ந் திகதி இஸ்ரேல் ஆக்கிரமித்தது சூயஸ் நெருக்கடி ஏற்பட்ட சமயம் அது.

### அரசியல்

இஸ்ரேலில் ஜனநாயக பார்லிமெண்ட் அரசியல் அமைப்பு உள்ளது. 8 அரபுகள் உட்பட 120 மெம்பர்கள்கொண்ட 'நெஸட்' என்ற அரசியல் அமைப்புச் சபை 1949ம் வருடம் கூடியது. 18வயது வந்தோரனைவருக்கும்வாக்குரிமை யுண்டு அவர்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றனர். நெஸட் எனும் பார்லிமெண்ட் சபையின் ஆயுட்காலம் 4வருடங்கள். 1965ம் வருடம் நவம்பரில் நடந்த தேர்தலின்படி, லெவி எஷ்கால் என்ற பிரதமரின் தலைமையில் கூட்டுமந்திரிசபை அதிகாரத்திலுள்ளது. இஸ்ரேலுடன் 90 நாடுகளுக்கு அரசியல் உறவு உள்ளது.

### போர்ப்பலம்

18முதல்26 வயதுள்ளவர்களனைவரும்26 மாதகட்டாய இராணுவப்பயிற்சி பெற வேண்டும். மணமாகாத பெண்கள் அதே வயதில் 20 மாத இராணுவப் பயிற்சி பெறுகின்றனர்.

உலக போர்ப்பல ஆராய்ச்சிக் கழகத்தின் படிக்கு இஸ்ரேலின்படைபலம் பின்வருமாறு—சேனை-2, 64000 ஆட்கள், டாங்கிகள்- 800, போர் விமானங்கள்-350, கடற்படை-2 நாசகாரிகள், 4நீர்மூழ்கிகள், 19 சிறிய போர்க்கப்பல்கள்.

---

## வடபகுதியில் இரு மீன்பிடி நிலையங்கள்

காங்கேசன்துறை, வியா.

வடபகுதியில் இரு மீன்பிடி நிலையங்களை நிறுவும் முயற்சியை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளது.

வட பகுதியில் அதிக மீன்பிடி இடமாகிய மயிலிட்டியில் ஒன்றும் மற்றொன்று பருத்தித்துறையிலும் நிறுவப்படவிருக்கின்றன. வட பகுதியில் பிடிக்கப்படும் மீன்களைச் சேகரித்து கொழும்புக்கு அனுப்பும் வேலைகளை இந் நிலையங்கள் மேற்கொள்ளும். இவ்விரண்டு நிலையங்களுக்கான பொறுப்பதிகாரிகளின் கந்தோர் மயிலிட்டியில் அமையும். இயந்திரப் படகுகளிலிருந்தும் கட்டுமரங்களிலிருந்தும் மீன்களை எடுப்பதற்காக தற்பொழுது மீன்பிடிக் கூட்டுஸ்தாபனம் பெயர்ப் பட்டியலை எடுத்து வருகிறது.

## ஆயுள்வேத வைத்தியசாலை

பூநகரி, வியா.

பூநகரி பல்லவராயன்கட்டுக் கிராமசபைசித்த ஆயுள்வேத வைத்யதிசாலை யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் திறந்து வைக்கப்பட்டது. வைத்தியசாலைப் பொறுப்பினராக ஆயுள்வேத டாக்டர் திரு. பி. சண்முகரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருவாளர்கள் ஏ. வி. இராசரத்தினம், எஸ். சிவகுரு, பி. கே. விஸ்வலிங்கம், கே. அன் [illegible] பி. சண்முகரத்தினம், கே. சோமசுந்தரம் ஆகியோர் திறப்பு விழாவில் உரையாற்றினர்.

---

## ஐயாறன் எழுதுவது

இப்போது ஊரெல்லாம் இஸ்ரேல்—அரபு சண்டையைப் பற்றித்தான் பேச்சு, இச் சண்டை நீடிக்குமா, பெரிய உலகச் சண்டையாகக் கிளம்புமா? அல்லது உடன் அடங்கி விடுமா? என்று பலரும் ஆவலுடன் கேட்கின்றனர்.

சண்டை நீடிக்க வேண்டுமென்று சிலருக்கு ஆவல். சென்ற முறை ஜப்பான் குண்டு விழுந்த போது, சிலருக்கு அது தங்கக் குண்டாக இருந்தது திடீரென அவர்களைப் பெரிய பணக்காரராக்கிவிட்டது. இப்போது சண்டை ஆரம்பித்ததுமே, இங்கு ரப்பர் விலை ராத்தலுக்கு சில சதம் கூடி விட்டதாம். ரப்பர் பிரபுக்கள் சண்டை நீடிக்கக் கூடாதாஎன்று பிரார்த்தனை செய்யலாம்.

இவர்களுக்கே இப்படி என்றால், ஆயுத பிரபுக்களுக்கு எப்படி இருக்கும். நாசகார ஆயுதங்களை உற்பத்திசெய்து விற்பனைசெய்யும் வல்லரசுகளுக்கு இப்போது சுக்ரதசை. சண்டை வந்தால்தான் டாங்கி முதலிய ஆயுதங்களுக்கு அதிக கிராக்கி. அதிகலாபம் கிடைக்கும். ஆயுத பிரபுக்களே சண்டையை மூட்டிவிட ரகசிய ஏற்பாடு செய்வார்களாம்! சமாதானம் ஏற்பட்டால் அவர்களுக்கு 'பிஸினஸ்' ஏது? யார் செத்தால் என்ன, எந்த நாடு நாசமானால் என்ன, தங்களுக்கு லாபம் கிடைத்தால் அது போதும்!

இந்த ஆயுதப் பிசாசுகளிடமிருந்து உலகம் எப்போது காக்கப்படுமோ!

சண்டையில் இங்கு ஏதும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறதா? என்று விசாரிந்தேன். மண்ணெண்ணெய், பெட்ரோல், மாவு இவற்றுக்கு சற்றே தட்டுப்பாடாம். ஒருகலன் மண்ணெண்ணெய் கேட்டால் மூன்று போத்தல் தான் கொடுப்பதாயும், ஒரு போத்தல் பெட்ரோல் கேட்டால் அரைப்போத்தல்தான் தருவதாயும், மாவு மறைந்து கண்ணாமூச்சி விளையாடுவதாயும் ஓர் அன்பர் தெரிவித்தார். சண்டை நீடிக்குமாயின், விலைவாசிகள் உயரும். மக்களுக்குக் கஷ்டம்தான். ஆகவே இச் சண்டை சீக்கிரம் நிற்க வேண்டுமென்றே நாம் பிரார்த்திப்போம்.

ஃ

நேற்று ஒருகல்லூரி ஆசிரியர் ஒரு நண்பருடன் வந்து, ஒரு தேயிலை பொட்டணத்தைக் காட்டினார். ''கலப்படத்தைப் பற்றி எழுதுகிறீர்களே இதைச் சற்று பாருங்கள்'' என்றார். அதை வாங்கிப் பார்த்தேன். திடுக்கிட்டேன். என்ன இருந்தது தெரியுமா? வெறும் மரத்தூள்தான். இடையிடையே ஏதோ கறுப்புத் தூள் இருந்தது. முகர்ந்து பார்த்ததில் அதுவும் மரத்தூள்தான். தேயிலை கலப்படமே சிறிதும் இல்லாத அசல் சுத்தமான மரத்தூள்!

அத்தப் பொட்டணத்தை யாழ்ப்பாணத்தில் ஒரு பொறுப்புள்ள கடையில் வாங்கியதற்கு ரசீதும் காட்டினார். ஒரு ஐரோப்பிய கம்பெனியார் தயாரித்ததாக அதன்மீது அச்சடித்திருந்தது. அக்கடைக்காரரோ, அந்தக் கம்பெனியாரோ இதை நிச்சயம்செய்திருக்கமாட்டார்கள். வேறு யாரோதான் இந்தக் கள்ள வேலை செய்திருக்கவேண்டும்.

சென்ற யுத்தகாலத்தில் மிளகாய்ப்பொடி என்று செங்கல் பொடியை விற்றார்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசியாவில் தொடர்ந்து போர்

## ஐ. நா. பந்தோபஸ்து சபையின் இரண்டாவது அவசர கோரிக்கை

நியுயோர்க், ஜூன் 8

**மேற்கு ஆசியப்போரில் சம்பந்தப்பட்ட நாடுகளை 24 மணித்தியால நேரத்திற்குள் போர் நிறுத்தம் செய்யுமாறு ஐ. நா. பந்தோபஸ்துசபை மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது. ஒரு நாள் வித்தியாசத்தில் ஐ. நா. பந்தோபஸ்துசபை விடுத்துள்ள இரண்டாவது கோரிக்கை இதுவாகும்.**

**நேற்றைய பந்தோபஸ்துசபைக் கூட்டத்தில், போரிடும் நாடுகளை ஒரு குறிப்பிட்டகாலவரையறைக்குள் போரைநிறுத்துமாறுகோரும் தீர்மானம் சோவியத் ரஷ்யாவினால் பிரேரிக்கப்பட்டது. இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.**

இத்தீர்மானத்தைச் செயற்படுத்தும் நோக்கத்துடன் சபைத்தலைவர், ஐ.நா.பொதுக்காரியதரிசி யுதாண்டின் உதவியுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கனடாஒருயோசனையைச் சமர்ப்பித்தது.

செவ்வாய்க்கிழமை ஐ. நா. பந்தோபஸ்துசபை நிறைவேற்றியிருந்த தீர்மானத்தை, போரிடும் நாடுகளில் ஜோர்தான் மட்டுமே ஏற்றுக்கொண்டதாக அறிவித்தது.

போரில் சம்பந்தப்பட்ட மற்றத்தரப்பினர் போர் நிறுத்தத்தீர்மானத்தை ஏற்கத்தயாரானால் தானும் ஆயத்தமாகஉள்ளதாக இஸ்ரேல் அறிவித்திருந்தது.

ஜோர்டான் தீர்மானத்தை ஏற்றுள்ளது பற்றிக் குறிப்பிடுகையில், அது ஐ. அ. குடியரசின் தலைமையின் கீழேயே உள்ளதாக இஸ்ரேல் வெளியுறவு மந்திரி எபான் கூறியுள்ளார்.

தொடரும் இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவதாக ஜோர்டான் அறிவித்துள்ளது.

பந்தோபஸ்து சபையில் இரண்டாவதுதீர்மானத்தை நேற்றுப் பிரேரித்துப் பேசுகையில், சோவியத் பிரதிநிதி, ஐ. நா. பந்தோபஸ்து சபையின் முதலாவதுதீர்மானத்துக்கு இணங்காதவற்கு இஸ்ரேலையே குற்றஞ்சாட்டி அதை ஓர் ஆக்கிரமிப்பு நாடெனக் கண்டித்தார்.

# இஸ்ரேலுடன் தூதரகதொடர்பை துண்டிப்பதாக எச்சரிக்கை

## சோவியத் பிரதிநிதி விடுத்தார்

தற்போதைய ஐ.நா. பந்தோபஸ்துசபைத் தீர்மானத்துக்கும் இஸ்ரேல் இசையாவிடின், இஸ்ரேலுடன் தூதரகத் தொடர்புகளை ரஷ்யா துண்டித்துக்கொள்ள வேண்டிவருமெனவும்சோவியத் பிரதிநிதி எச்சரித்தார்.

ஐ.அ.குடியரசு, இஸ்ரேலை ஆக்கிரமிப்பு நாடெனப் பிரகடனப்படுத்துமாறு ஐ. நா. பந்தோபஸ்துசபையைக் கேட்டுள்ளதுடன், இஸ்ரேல் துருப்புக்கள் 1948ம் ஆண்டைய போர் நிறுத்த எல்லைக்குத் திரும்பிச்செல்லவேண்டுமென்றும் கோரியுள்ளது.

காஸாவில் ஐ.நா.அவசர காலப்படையைச் சேர்ந்த 11 பேர் கொல்லப்பட்டதாக ஐ. நா. தலைமைக்காரியாலயத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. என்பது இந்திய, 1 பிரேஸிய இராணுவ வீரர்களும், ஒரு ஐரிஷ் பார்வையாளரும் தான் இவர்கள்.

# கேந்திர ஐ. அ. கு. துறைமுகம் ஷரம்-எல்-சேக் வீழ்ந்தது

## காஸாவில் ஐ. அ. கு. சரண்?

டெல் அவிவ், ஜூன் 8

இஸ்ரேல் துருப்புகள் சூயஸ் கால்வாயிலிருந்து 12 மைல் தூரத்தில் வந்துவிட்டன. அக்காபா வளைகுடாவிலுள்ள கேந்திர ஐ. அ. குடியரசுத் துறைமுகமான ஷரம்-எல்-சேக்கையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர். சினாய் குடா நாடு ஏற்கனவே அவர்கள் கைகளில் விழுந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

காஸா தலைநகர், இஸ்ரேல் துருப்புகளிடம் சரணடைந்துவிட்டதாக ஐ. அ. குடியரசு இராணுவத் தளபதி உத்தியோகபூர்வமான பத்திரங்களைக் கைச்சாத்திட்டுள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் இதை ஊர்ஜிதம் செய்யும் அறிக்கை எதுவும் கெயிரோவில் வெளியிடப்படவில்லை.

இஸ்ரேல், தான் ஐ. அ. குடியரசில் இஸ்மெயிலியா நகரைக் கைப்பற்றியதாகக் கூறப்பட்டுள்ளதை மறுத்துள்ளது.

இஸ்ரேல் இராணுவத் தளபதி ஜெனரல் டயான், எந்த நேரத்திலும் சூயஸ் கால்வாய்க்குள் செல்லக்கூடிய நிலையில் தமது துருப்புகள் இருந்தபோதிலும், அவ்வித நோக்கமெதுவும் இஸ்ரேலுக்குக் கிடையாதென்று தெரிவித்துள்ளார். ''சர்வதேசப் பிரச்னைகளில் எம்மை ஈடுபடுத்த நாம் விரும்பவில்லை'' என்றார் அவர்.

# இஸ்ரேலின் இரண்டு முக்கிய நோக்கங்கள் நிறைவேறி விட்டன

## ஜெனரல் டயான் அறிவிப்பு

இஸ்ரேலின் பாதுகாப்புக்கு ஆபத்தான முறையில் சினாய் எல்லையில் ஐ. அ. குடியரசு குவித்த படைகளில் பெரும்பகுதியை அழித்துவிட்டதாகவும், அக்காபா வளைகுடா பந்தனத்தை முறியடிக்கும் வகையில், ஐ. அ. குடியரசுத் துறைமுகமான ஷரம்-எல்-சேக்கைக் கைப்பற்றியதாகவும் அறிவித்த ஜெனரல் டயான், இஸ்ரேலின் முக்கிய நோக்கங்கள் இரண்டும் நிறைவேறியு[illegible] குறிப்பிட்டார்.

கெயிரோவிலிருந்து வரும் செய்திகள், அல் அரிஷ் நகரத்திற்கு மேற்கே இஸ்ரேல் துருப்புகள்மீது ஐ. அ. குடியரசு விமானங்கள் ரொக்கெட்டுகளை வீசியதாகவும், [illegible]களுக்குப் பலத்த சேதமேற்பட்டதாகவும் கூறுகின்றன.

# இஸ்ரேல் பாராத்துருப்புகள் நிர்மூலம்

## ஜோர்தானில் இஸ்ரேல்முன்னேற்றம்

கிஞய் பகுதியில், ஐ. அ. குடியரசுத் துருப்புகள்தமது முன்னிலைகளை விட்டு, இரண்டாம் நிலைகளை நிறுத்தியுள்ளன. இந்த இரண்டாம் நிலையைக் குலைக்க, இஸ்ரேல் பாராத் துருப்புகள் அனுப்பப்பட்டதாகவும், அவர்கள் நிர்மூல மாக்கப்பட்டதாகவும் கெயிரோ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அக்காபா வளைகுடாவிலுள்ள ஷரம்-எல்-சேக்கிலிருந்து ஐ. அ குடியரசு தனது துருப்புகளை விலக்கிக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத் துருப்புகளும் இப்போது சினாய் பகுதிக்கே அனுப்பப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஜோர்தானில், இஸ்ரேல் துருப்புகள் ஜெலிக்கோ, பெத்லெஹம் உட்பட பெரும் பகுதியைக் கைப்பற்றியுள்ளதாக தெரிகிறது

# முதலாவது கப்பல் சண்டை

## சிரியா போர் முனையில்

## இஸ்ரேல் துருப்புகள் பின்வாங்கின

இஸ்ரேலுக்குத் தெற்கே, முதல் முறையாகக் கப்பல் சண்டை நடைபெற்றுள்ளது. ஐ. அ. குடியரசுக் கப்பல்கள் பீரங்கிகளினால் இஸ்ரேல் கப்பல்களைத் தாக்கின.

வடக்கு இஸ்ரேலில், சிரியாத் துருப்புகள் சில மைல்

[4-ம் பக்கம் பார்க்க]

# மேற்கு ஆசியா பற்றி மேலும் பல செய்திகள்

ஏமனில், அமெரிக்கக் காரியாலயம் ஒன்று தீவைக்கப்பட்டது.

அல்ஜீரியாவில், அமெரிக்கப் பிரஜைகளை வெளியேறுமாறு கூறப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் பிரஜைகளையும் வெளியேறுமாறு பிரிட்டிஷ் அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளனர்.

ஐ. அ. குடியரசு, 22 அமெரிக்கப் பத்திரிகையாளரை வெளியேற்றியுள்ளது.

## ஐ. அ. குடியரசு-சூடான் பாதுகாப்பு ஒப்பந்தம்

சூடான், ஐ. அ. குடியரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துள்ளது, தலைநகரானகார்டுமிலுள்ள விமான நிலயங்கள் பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்களுக்கு மூடப்பட்டுள்ளன. சூடானுக்கு மேலாக இவ்விமானங்கள் பறக்கக்கூடாதெனவும் சூடான் எச்சரித்துள்ளது.

## டி'கோல்-கொஸிஜின் கடிதத் தொடர்பு

மேற்கு ஆசியா நிலைமை பற்றி பிரெஞ்சு ஜனாதிபதி டி'கோலுக்கும், ரஷ்யப்பிரதமர் கொஸிஜினுக்குமிடையே கடிதப் போக்குவரத்து தொடர்ந்து நடைபெற்றுவருவதாக பிரெஞ்சு வெளியுறவு மந்திரி பிரெஞ்சு அசெம்பிளியில் அறிவித்தார். இக்கடிதத் தொடர்பில், அக்காபாவளைகுடாவில் கப்பல் போக்கு வரத்து உரிமைகள், பாலஸ்தீன அகதிகள்பிரச்னை ஆகியவை குறிப்பிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது நாடுகளிலுள்ள அமெரிக்கத் தளங்களை அழித்துவிடுமாறு லிபியர்களையும், மொரோக்கோவினரையும் அல்ஜியர்ஸ் வானொலி கேட்டுக்கொண்டுள்ளது.

## பீகிங்கில் ஆர்ப்பாட்டம்

பீகிங்கில் பிரிட்டிஷ் தூதரகத்திற்கு முன்னால் பல்லாயிரக்கணக்கான சீன மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர், யூனியன் ஜாக் கொடியை இழுத்துக் கிழித்தனர். இரண்டு பிரிட்டிஷ் அதிகாரிகளை அடித்துத் துன்புறுத்தினர். அரபு நாடுகளுக்கெதிராக ஆக்கிரமிப்பு நிகழ்த்தியதாக பிரிட்டன், அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கெதிராகவே இந்தஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## திருமதி இந்திராகாந்திக்கு இஸ்ரேல் பிரதமர் தந்தி

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில், இஸ்ரேல் சமாதானத்தையன்றி பிறிதொன்றையும் விரும்பவில்லையென்றும், தமது நியாயமான கப்பல் போக்கு வரத்து உரிமைகள் மீண்டும் நிலைநாட்டப்படவேண்டுமென்பதே தமது கோரிக்கையாகுமெனவும் இஸ்ரேல் பிரதமர் எஷ்கோல் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் திருமேனியில்
சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்க மிகவும் உகந்த
# பச்சை சந்தனம்
உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறேம்.
என்றும எங்களிடம கிடைக்கும்.
சுந்தரம் பிரதர்ஸ்
கோவில் அபிஷேகப்பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்
(புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## கோப்பாயில் சுகாதார விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் சுகாதாரப் பகுதியினரின் மக்கள் சுகாதார வாரவிழா இம் மாதம் 11-ம் திகதி கொண்டாடப் படவிருக்கின்றது. அன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் சுகாதார மந்திரி திரு. ஜெயவர்த்தன இவ் விழாவுக்கும் விஜயம் செய்ய விருக்கின்ருர். திரு. ஜெயவர்த்தனவும் பாரியாரும் அன்று மாலை 5 மணிக்கு கோப்பாய் சந்தியிலிருந்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலுள்ள விழா மண்டபத்துக்கு அழைத்துவரப் படடதும், திரு. ஜெயவர்த்தன உணவு, போஷாக்கு, தாய்சேய் நலம் ஆகியன சம்பந்தமான பொருட்காட்சிகளைத திறந்து வைப்பார். [ந. நி]

# 'விசேஷ வாழ்க்கைப்படியை 30 ரூபாயாக அதிகரிக்குக'

## சுகாதார சேவையாளர் பிரதமரை கோருவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

விலைவாசிகள் விஷம்போல் ஏறுவதால் அன்றாட வாழ்க்கையை நடாத்தமுடியாது திண்டாடும் அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்ச்சியை ஆராய ஒரு கமிஷனை உடனடியாக நியமிக்குமாறும், பல வருடங்களுக்கு முன்பிருந்த விலைவாசிகள் ஏற்றத்தை ஆதாரமாகக் கொண்டே விசேஷ வாழ்க்கைப்படியாக ரூபா 17-50 அரசாங்கத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டதெனினும் இன்றுள்ள விலைவாசிகள் அன்றைய நிலையை விடப் பன்மடங்காக அதிகரித்துள்ளதால் விசேஷ வாழ்க்கைப்படியாகச் சகல தொழிலாளர்களுக்கும் 30 ரூபா கொடுக்குமாறும் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவை கோரு பிரேரணை இம்மாதம் 15ம் திகதி நடைபெறவிருக்கும் தேசிய அரசாங்க சுகாதார சேவையாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் சுகாதார சேவையிலுள்ள தொழிலாளர்களின் நலன் கருதி அவர்களின் வேலைத் திட்டம், சம்பள உயர்வு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட 12 பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. ந. நி.

## மீட்கப்படவில்லை

பூநகரி, வியாழன்

பூநகரி சேரதீவு ஆயத் துறையில், கார், லொறி, டிராக்டர் முதலியன ஏற்றும் மரப்பாதை சுமார் ஒரு மாத காலமாகக் கடலுக்குள் அமிழ்ந்து கிடப்பதாகவும், இதுவரை இப்பாதை மீட்கப்படாததினல் வாகனங்கள் செல்வது கஷ்டமாக இருக்கிறதென்றும், இது பற்றி பொது மராமத்து இலாகாவுக்கு அறிவிக்கப்பட்டும் இன்னும் ஒருவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று தெரிகின்றது.

## முதலாவது . . . .

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தூரம் முன்னேறியிருப்பதாகவும், இஸ்ரேல் துருப்புகளைப் பின்வாங்கச் செய்திருப்பதாகவும் சிரியா அறிவித்துள்ளது.

சிரியாக் கிராமங்களை இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசித் தாக்குவதாக இஸ்ரேல் அறிவித்தது. ஆனல் சிரியாவின் அறிவிப்பு பற்றி அது எதுவும் குறிப்பிட வில்லை.

## கலந்துரையாடல் வகுப்பு

பூநகரி, வியாழன்

பூநகரி வாடிவீட்டில் 10ம் 11-ம் திகதிகளில் பூநகரிப் பகுதிகளிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாக சபை அங்கத்தவர்களுக்கு ஒரு பயிற்சி வகுப்பு நடைபெற இருக்கின்றது. கூட்டுறவு உதவிஆணையாளர் திரு. ரி. கந்தசாமியும் பூநகரிக்காரியாதிகாரி திரு. எஸ் செல்வநாயகமும் இதில் கலந்துகொள்வார்கள்.





ஷெல் ரசாயனப் பொருட்கள் பாவித்து அதிக உணவு பயிரிடுக

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரசாயனப்பொருளை நினையுங்கள் ஷெல்லை நினையுங்கள்

அல்ட்ரெக்ஸ், டீல்ரெக்ஸ் 20, டீல்ரெக்ஸ் எக்ஸ்ட்ரா. ஆர்கோடீன், பொஸ்றின், என்ரெக்ஸ் 20, மலதியன், சுமித்தியன், ஷெல் களைப்புத்கொல்லி எம் 50, ஷெல் களைப்புத் கொல்லி ஆர். ரெமவின், ஷெல் பி. எச். சி. 10% தூள்—இவை ஷெல் ரசாயனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட்களில் சில மாத்திரமே.






அரஸ்கோ
மயில் மார்க்
# கற்பூரம்




ஜப்பானிலிருந்து நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 960 வில்லைகள் கொண்ட ரின் கற்பூரத்திற்கு எவ்வகையிலும் குறைவுபடாது எல்லாவகையிலும் அதற்கு நிகரான ரின் கற்பூரம் எங்களால் தயாரிக்கப்படும் ''மயில்'' மார்க் ரின் கற்பூரமே.

எங்கள் கற்பூரம் கொஞ்சமும் கலப்பு இன்றி சுத்தமான விளைவு கற்பூரத்தில் தயாரிக்கப்பட்டது.

மயில் மார்க் கற்பூரம் 128 வில்லைகள் கொண்ட 1/4 இரு., 1/2 இரு. பெட்டிகளிலும் உண்டு.

மயில் மார்க் கற்பூரம்
என்றே கேட்டு வாங்குங்கள்

சில்லறை விலை

1/4 இரு. பச்சை பெட்டி ரூபா 4-25 சதம்.
1/2 இரு. மஞ்சள் பெட்டி ரூபா 7-50 சதம்.
960 வில்லைகள் கொண்ட
தகரப்பெட்டி ரூபா 15-00

தயாரிப்பாளர்:

அரஸ்கோ கற்பூரத் தொழிற்சாலை,
பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்
109, றெக்ளமேஷன் றேட்; கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏலவிற்பனவு

குரும்பசிட்டி திரு. பொ. வயித்திலிங்கத்தின் வீட்டில் 1-6-66 திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவற்றை 26-6-67 திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அதே இடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்.

2331


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
பேயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
நாகேஸ்வரராவ் —
அஞ்சலிதேவி
நடித்த
மங்கையின் சபதம

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
கல்யாண பரிசு

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
SEAN CONNRY
in
FROM RUSSIA
WITH LOVE


காங்கேசன்துறையில்

# இராணுவத்தினர் தாக்கி ஒருவர் காயம்?

யாழ்ப்பாணம், வெள்ளி காங்கேசன்துறையைச் சேர்ந்த ஒருவர் இரு இராணுவ வீரர்களின் திடீர் தாக்குதலினால் காயத்துக்குள்ளானாராம். சம்பந்தப்பட்ட இரு இராணுவ வீரர்களும் யார் என்பதை கண்டுபிடிப்பதில் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

காங்கேசன்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை முருகுப்பிள்ளை என்பவரே இராணுவ வீரர்களின் தாக்குதலுக்கு இலக்கானவராவார். இரு இராணுவ வீரர்களும் இனம் கண்டுகொள்ள முடியாத விதத்தில் சிவப்பு அங்கிகள் அணிந்து கொண்டே முருகுப்பிள்ளையைத் தாக்கியதாக காங்கேசன்துறைப் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டது. காங்கேசன்துறைப் பொலிசார் இது விஷயத்தை வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்தே அவர் மேற்கண்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளார். [ந. நி]

## 'உபகரணங்கள் இல்லை'

உடுப்பிட்டி, வியாழன் "இங்கு போதிய கட்டிடங்கள் இருந்தும் விஞ்ஞான உபகரணங்களும், ஆசிரியர் பற்றுக்குறையும் நிலவி வருவது மாணவரின் கல்வியைப் பாதிக்கின்றது. கல்லூரி மாணவ மாணவிகள் தங்கள் வீடுகளிலே விஞ்ஞான முறைப்படி உப-உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முன்வரவேண்டும்" என்று முல்லைத்தீவு மகாவித்தியாலய விஞ்ஞான மன்ற நிதிக்காக வித்தியாலயஅரங்கில் நடாத்தப்பட்ட கலைவிழாவிற்குத்தலைமைவகித்த உப-அதிபர் திரு. எஸ். கே. செல்வரத்தினம் கூறினர்.

விஞ்ஞான

## உபகரணங்கள் கிடைத்தன

பூநகரி, வியாழன் எட்டாம் வகுப்பு வரை விஞ்ஞானக் கல்வியைச் சிராகப் பயிற்றுவதற்காகப் பூநகரி மகாவித்தியாலயத்திற்குச் சில உபகரணங்கள் தருவிக்கப்பட்டுள்ளன. பல வருடங்களாக விஞ்ஞான உபகரணங்கள் பூநகரி மகா வித்தியாலயத்திற்கு வழங்கப்படவில்லை. மேல் வகுப்புகளுக்கும் விஞ்ஞானப் பாடங்களைப் புகுத்துவது பற்றிப் பெற்றோர் - ஆசிரியர் சங்கமும், அதிபரும் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக அண்மையில் கல்வி திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் வந்து விசாரணை நடத்திச் சென்றுள்ளார். அவரின் அறிக்கையைத் தொடர்ந்து மேல் வகுப்புகளிலும் விஞ்ஞான பாட போதனை விஸ்தரிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இங்கு தளபாடங்கள் இல்லாக்குறையும் ஓரளவிற்கு நீங்கும் அறிகுறிகள் தென்படுகின்றன. கறுக்காய்த்தீவு அரசினர் பாடசாலையிலிருந்தும், செம்பன்குண்டு தமிழ்க்கலவன் பாடசாலையிலிருந்தும் மேலதிகமான கதிரை, மேசைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபருக்கு கல்வி இலாகாவிலிருந்து உத்தரவு வந்துள்ளது. தளபாடங்கள் இல்லாக்குறையைச் சுட்டிக்காட்டி அதிபர் திரு. மு. சிவானந்தமும், தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினமும் பல தடவைகள் கல்விஇலாகாவிற்குச் கடிதங்கள் எழுதியிருந்தனர்.

## ஆசிரியர்கள் தரம் உயர்த்தப்படும்

கோயம்பத்தூர், ஜூன் 8 ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த தமிழக அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமெனத் தமிழகக் கல்வி மந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன், நேற்று கோயம்பத்தூர் ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் மாநாடொன்றில் பேசுகையில் உறுதியளித்தார்.

மும்மொழிக் கல்வித் திட்டம் பற்றி அவர் குறிப்பிடுகையில், 9-வது வகுப்பு வரை தமிழும் ஆங்கிலமும் படிக்கும் மாணவர்கள், அதன் பிறகு இந்தியை ஓர் இஷ்ட பாடமாகப் படிக்கலாம் என்று கூறினர்.

சேலம் எஃகு தொழிற்சாலை, தூத்துக்குடி துறைமுகம் பற்றித் தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை மத்திய அரசாங்க [illegible] யன் கூறினர்.

## வரி விளம்பரம்

### கல்வி

வகுப்புகள்:
அளவெட்டி கணேசன் கல்வி நிலையத்தின் கிளையொன்றை நிர்15, பிரப்பங்குளம்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஸ்தாபித்திருக்கிறோம். G.C.E, சாதாரணம், உயர்தரத்துக்கான வகுப்புகள், விஞ்ஞானம், கலை ஆகிய இரு பிரிவுகளிலும் காலை/மாலை நடாத்தப்படுகின்றன. மற்றும் சிங்களம், வர்த்தக பாடங்கள் ஆங்கிலம் முதலிய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. சேர விரும்புவோர் உடனே சேரவும். 2413

### விற்பனைக்கு

தென்னந்தோட்டம்:
கவுதாரி முனையில் உள்ள மண்ணித்தலையில்45 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 23, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 2416

காணி:
கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் உள்ளதோட்டச்செய்கைத்தறை ஐம்பது பரப்பு வற்றுக்கிணறு மோட்டாருடன் விற்பனைக்கு இருக்கிறது. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். த பொன்னம்பலம், அம்மன் கோயில்ரேட்டு, கிழக்குக் கொக்குவில். 1898

### திருமண அழைப்பு

மணமகன்: செல்வன்விவேகானந்தன் [விவசாய இலாக்கா] தொண்டமானாறு, ஆ. சிவசம்பு தம்பதிகளின்புதல்வன். மணமகள்: செல்வி கனகேஸ்வரி வீ. இராஜசேகரம் தம்பதிகளின் புதல்வி [உரிமையாளர்சி. வீரகத்திப் பிள்ளை&சன்ஸ், தொண்டமாறு] இடம்: தொண்டமானாறு செல்வச்சந்நதி கோவில். காலம்: இன்று 26ந்வ [9-6-67] வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-45மணி தொடக்கம் 7-32 மணியளவில் வரும் சுபவேளை. வரவேற்பு: மணமகள் இல்லம்- 10-6-67 சனிக்கிழமை பிற்பகல் 5 மணி முதல் 7-30 மணிவரை. மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இங்ஙனம். வீ. இராஜசேகரமும் பாரியாரும்[சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்], ஆ. சிவசம்புவும் பாரியாரும் தொண்டமானாறு. 2415

### தேவை

ஆசிரியர்
அளவெட்டி, கணேசன் கல்வி நிலையத்தின் யாழ்ப்பாணம் கிளை ஸ்தாபனத்தில், கலைப்பிரிவிலும் விஞ்ஞானத்திலும் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் உடனே தேவை. H.S.C. அல்லது G.C.E. [உயர்தரம்] கற்றவர்கள் விண்ணப்பிக்கவும். கணேசன் கல்வி நிலையம், 15, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். 2417

கலா சோப் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு விற்பனவுகாரனும் [Sales man] விற்பனவு பெண்களும் [Salesgirls] தேவை. 10 சத முத்திரையுடன் மனுச் செய்க. மனேஜர், கலா சோப் தொழிற்சாலை, சங்கானை. 2418

## யாழ். நீர் வளம் பற்றி ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம், வியாழன் உலக சுகாதார ஸ்தாபனத்தைச் சேர்ந்த குறுகிய கால ஆலோசகரான டாக்டர் மார்ட்டின் காய்ஸ் யாழ்ப்பாண நீர்வளம் பற்றி ஆராய்ச்சி செய்யும் பொருட்டு ஒரு வார கால யாழ்ப்பாணச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார். உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்தின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் வந்திருக்கும் திரு. மார்ட்டின் காய்ஸுடன், புவியியல் நிபுணரான திரு. சிறமனேயும் வந்துள்ளார்.

யாழ்ப்பாணம் குடிதண்ணீர் தட்டுப்பாடு, புங்குடுதீவு நீர் விநியோகம் பற்றி ஆராய்ச்சி செய்யும் பொருட்டு புங்குடுதீவு, வேலணை ஆகிய தீவுப்பகுதிகளுக்கு விஜயம் செய்த இவர்கள் நேற்று வட மாகாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினத்தைச் சந்தித்து இதுபற்றி ஒரு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலவளம், நீர்வளம் பற்றி ஆராய்ச்சி செய்த இவர்கள் இன்று கொழும்பு திரும்பியதும், தமது அறிக்கையை உள்ளூராட்சி அமைச்சரிடம் சமர்ப்பிப்பார்களெனத் தெரிகின்றது. [ந. நி.]


இப்பொழுது நடைபெறுகிறது!
இங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] ஈரோஸ் [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] மொடேர்ன் [பதுளை]
மொடேர்ன் [பண்டாரவளை] விஜிதா [ஹட்டன்] தீவொளி [நுவரெலியா]
கல்யாணி [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் சிவாஜி கணேசன்,
நடிக ராணி கே. ஆர். விஜயா,
ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,
நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்சின்
செல்வம்

ராதா மணிமார்க்
சந்தனாதித் தைலம்
கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.
தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.
எங்கும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)
ஏகவிநியோகஸ்தர்கள்:-
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]
53, கே. கே. எஸ். ரேட், பெரியகடை, யாழ்ப்பாணம். "பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 11-ம் திகதி யாழ்ப்பாணம் வரும் சுகாதார அமைச்சர்

## பல இடங்களையும பார்வையிடுவார்

யாழ்ப்பாணம், வெள்ளி சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனு இம்மாதம் 11-ந் திகதி உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணம் வருகின்ருர். இவ்வருடத்தில் இவர் இரண்டாவது தடவையாக மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்வது குறிப்பிடத்தக்கது. சுகாதாரஅமைச்சருடன் அவரின் பாரியாரும் நிரந்தரக் காரியதரிசியான திரு. கு. பாலசிங்கமும் வருகிருர்கள். 11-ந் திகதி காலை பலாலி விமானநிலையத்தை வந்தடையும் சுகாதார அமைச்சரை வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, யாழ். மாவட்ட வைத்திய அத்தியட்சகர், உதவி அரசாங்க அதிபர், காரியாதிகாரிகள் ஆகியோர் விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்பார்கள். யாழ்ப்பாணத்தில் திரு. ஜெயவர்த்தனு கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-15 மணி அமைச்சர் பலாலி விமான நிலையத்தை வந்தடைதல். காலை 10-00 காங்கேசன்துறை மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் இரண்டு மேலதிக வார்டுகளுக்கான அத்திவாரக்கல் நாட்டுதல். காலை 11-45 பண்ணையில் அமைக்கப்படவிருக்கும் யாழ்ப்பாணம் மத்திய மருந்துச் சாலைக்கான கட்டடத்தைப் பார்வையிடுதல், நண்பகல் 12-30 யாழ்ப்பாணம் சிகிச்சை நிலையச் சபையினர் அளிக்கும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளல், 2-30 சாவகச்சேரிக்கு விஜயம் செய்தல். மாலை 3-00 கோவிலாக்கண்டியில் கிளை வைத்தியசாலையை திறந்துவைத்தல், மாலை 3-45 சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பல் சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்துவைத்தல், மாலை 5-00 கோப்பாய் சுகாதாரவாரவிழாவின் கண்காட்சிச் சாலையைத் திறந்துவைத்தல், 12-ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-10 மணிக்கு விமானம் மூலம் பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்பு திரும்புதல். [ந. நி.]

---

## ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

களாம்! இப்படிச் சம்பாதிக்கும் பணம் உருப்படுமா? அட கடவுளே;

ஃ ஃ ஃ

''முத்தமிழின் சுவை மணக்க, பூவுலகில் குறள் பரப்ப. செந்தமிழின் சீர்பரப்ப. இளந்தமிழன் குறள் படிக்க, வண்டமிழில் மறை வடித்த, வள்ளுவரின்வழிநடக்க'' புங்குடுதீவு திருவள்ளுவர் மன்றத்தார், வள்ளுவர் விழாவை நடத்தினர்.

கலியுகவரத பாலநந்தீஸ்வர தவில் வித்வான் கைதடி பழநிமலை குழுவினர் மங்கள வாத்யம் ஜமாய்த்தனர். சைவ சித்தாந்த கலைச்செல்வர் ''குறள் காட்டும் வாழ்வை''ப்பற்றி அருமையாகப் பேசினுர். பல இளம் சிங்கங்கள் வீரமுழக்கம் செய்தன.

''இவ்வித விழாக்களால் உண்மையில் ஏதும் பயனுண்டா என்பது தெரியவில்லை. ஒரு குறளின் படி நடந்தால் அது போதுமே'' என்று விழாவுக்கு ஒழுங்கு செய்த அன்பர்களில் ஒருவர் என்னிடம் தெரிவித்தார். ஊதுகிற சங்கை ஊதினுல், விடிகிறபோது விடியட்டும். ஒருவர் வாழ்க்கை திருந்தினுலும், அந்தமட்டில் நல்லது தானே.

எனக்கு ஒரு மகிழ்ச்சி. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு கூட்டத்திலே 'அகர முதல எழுத்தெல்லாம்...' என்ற பத்துக்குறளையும் ராகத்துடன் தோத்திரத்துக்குப் பதிலாகப்பாடியதைக்கேட்டேன். இப்படித்தான் இங்கும் செய்வார்களோ என்று நினைத்தேன். நல்லவேளையாக கடவுள் வணக்கத்துக்குத் தேவாரம் பாடி, இந்தியாவுக்கும் வழிகாட்டினர். திருக்குறள் ஒரு சாத்திர நூலேயன்றி தோத்திர நூல் அன்று. ஆனுல் இதைச்சொன்னுல். அண்ணுமலைக் காரர்கள் கேட்பார்களா?

ஃ ஃ ஃ

அல்லலோடு அரு நோயில் அழுந்திநீர், செல்லுமா நினையாதே கனைகுரல், கொல்லையேறுடைக் கொண்டீச்சுரனை, வல்லவாறு தொழ வினை மாயுமே.

—அப்பர் சுவாமிகள்

[துன்பத்தோடு நெருக்குகின்ற பிணியில் அழுந்தி பயனின்றி இறந்தொழியுமாறு நினைக்காமல், கனைத்த குரலை உடைய முல்லை நிலத்துக்குரிய இடபவாகனத்தை ஊர்ந்தவனுகிய கொண்டீச்சரத்து இறைவனை இயன்றவாறு தொழுவீராயின் வினைகள் மாயும்]

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தேசிய சுவீப் ..

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| 22 W 0935 | 50 O 0832 |
| 42 X 0020 | 16 B 0845 |
| 10 Z 0544 | 33 N 0713 |
| 15 Y 0238 | 05 M 0123 |
| 25 W 0702 | 33 D 0716 |
| 16 U 0365 | 18 U 0600 |
| 10 V 0361 | 32 V 0100 |
| 47 R 0697 | 24 O 0793 |
| 44 N 0803 | 35 G 0623 |
| 31 H 0826 | 15 M 0319 |
| 27 X 0575 | 17 N 0601 |
| 13 P 0905 | 19 E 0943 |
| 26 V 0583 | 18 H 0643 |
| 23 L 0642 | 46 M 0935 |
| 41 P 0432 | 52 R 0757 |
| 26 H 0887 | 52 Y 0517 |
| 18 G 0509 | 11 J 0864 |
| 47 M 0275 | 40 K 0653 |
| 09 Y 0458 | 52 H 0768 |
| 13 F 0760 | 03 H 0054 |
| 08 U 0099 | 33 Q 0925 |
| 32 Z 0784 | 48 J 0820 |
| 42 H 0156 | 46 X 0655 |
| 07 L 0426 | 11 Z 0584 |
| 42 X 0676 | 24 M 0489 |
| 24 F 0820 | 42 F 0299 |
| 51 K 0742 | 14 Q 0354 |
| 40 L 0018 | 51 P 0028 |
| 54 S 0871 | 33 L 0590 |
| 23 A 0716 | 41 Z 0248 |
| 43 H 0477 | 19 B 0965 |
| 38 T 0691 | 30 K 0985 |
| 02 A 0315 | 02 Z 0321 |
| 32 H 0084 | 21 V 0123 |
| 49 S 0367 | 47 Z 0832 |
| 17 W 0089 | 17 T 0553 |
| 26 M 0171 | 02 K 0391 |
| 12 Y 0855 | 07 M 0349 |
| 22 M 0553 | 16 P 0622 |
| 25 L 0775 | 04 Y 0727 |
| 50 N 0454 | 16 D 0474 |
| 52 X 0343 | 51 A 0857 |
| 35 V 0413 | 10 R 0542 |
| 47 R 0789 | 21 K 0162 |
| 12 A 0800 | 20 K 0809 |

[இவை உறுதிப்படுத்தப்படவேண்டியவை.]

---

## நெசவுநிலையம் பூர்த்தி

அச்சுவேலி [illegible] அரசாங்க நன்கொடையுடன் ஆரம்பித்து பொது மக்கள் ஒத்துழைப்புடன் [illegible] நெசவு நிலையக்கட்டடம் இம்மாத நடுப்பகுதியில் திறக்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எகிப்து எதிர்த்தாக்குதல்...

(1—ம் பக்கத் தொடர்ச்சி)

## அமெரிக்கா மீது மீண்டும் குற்றச்சாட்டு

இந்தச் சண்டையில் நிச்சயமாக வெளியார் தலையீடு இருப்பதாக ஐக்கியஅரபுக் குடியரசு கண்டித்துள்ளது. 3 அமெரிக்க விமானங்கள் சூய்ஸ்கால்வாயின் கிழக்கு கரையிலிருந்து வடக்கு பிரதேசம் நோக்கி வேவு பார்ப்பதற்காகப் பறந்துசென்றதாக ஐக்கியஅரபுக்குடியரசு குற்றஞ்சாட்டியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்துள்ளது.

## சூயஸ், கெய்ரோ மீது குண்டுவீச்சு

சூயஸ்கால்வாய் மீதும் கெய்ரோ நகரின் சில நிலைகள் மீதும் இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல்நடத்தியதாக முன்னர் கிடைத்த ஒரு செய்தி கூறியது. இந்தச் சண்டையில் 9 இஸ்ரேல் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஐக்கியஅரபுக்குடியரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது. சினய் பகுதியில் ஐக்கியஅரபுக்குடியரசு படைகள் உக்கிரமான எதிர்த்தாக்குதலை முடுக்கியிருப்பதை இஸ்ரேலும் இன்று ஒப்புக்கொண்டது. விர்கப்கபா பகுதியில் எகிப்துபடைகள் பெரும் டாங்கிகள் சகிதம் மூர்க்கமான எதிர்த்தாக்குதலில் இறங்கியுள்ளனர். இங்கு 100 எகிப்திய விமானங்களை சுட்டுத்தள்ளியதாக இஸ்ரேல் அறிவித்தது.

## 50 அமெரிக்க விமானங்கள்

50 அமெரிக்க விமானங்கள் லிபியா விமானத்தளத்திலிருந்து தாக்குதல் நடத்தப்புறப்பட்டுள்ளதாக ஐக்கிய அரபுக் குடியரசு அமெரிக்கா மீது குற்றம் சுமத்தியுள்ளது.

## அமெரிக்காவின் கோரிக்கை

ஐ. நா. பந்தோபஸ்துச் சபையை மீண்டும் கூட்டுமாறு அமெரிக்கா ஐ நா.வைக் கேட்டுக்கொண்டுள்ளது.

# ''பிடித்த இடத்தை விடமாட்டோம்''

ஜோர்டானுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ள போதிலும் ஜோர்டான் பிரதேசத்தில் இஸ்ரேலியர்கள் கைப்பற்றிய இடங்களிலிருந்து வெளியேறப் போவதில்லை என இஸ்ரேல் அறிவித்திருக்கிறது. இஸ்ரேலியர் கைப்பற்றிய பழைய ஜெருசலம் நகரில் இஸ்ரேலிய பாதுகாப்பு மந்திரி ஜெனரல் டயான் பேசுகையில், ''நாங்கள் மீண்டும் இங்கு வந்திருக்கிருேம். இங்கிருந்து செல்லமாட்டோம்'' என்று கூறினுர். இங்குள்ள அரபு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென்றும் அவர் கூறினுர். இஸ்ரேலியர் கைப்பற்றிய பகுதிகளிலுள்ள வீடுகளின் ஜன்னல்களில் வெள்ளைக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. பெரும்பாலும் மக்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். வீடுகளின் சமையலறைகளில் சமையல் பாதியிலிருக்கக் காணப்பட்டன.

# ''இப்போது தான் யுத்தம் ஆரம்பம்''

இஸ்ரேலுடனுன யுத்தம் இப்பொழுதுதான் உண்மையாக ஆரம்பமாகியிருக்கிறதென்று சிரியா அறிவித்திருக்கிறது. இஸ்ரேலுடனுன யுத்தம் தொடர்ந்து நடக்கும் என்று சிரியா தெரிவித்தது. இஸ்ரேலுடன் புதிய முனையொன்றில் சிரியா புதிய தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது. சிரியாப் படை அணியொன்று இஸ்ரேல் பிரதேசத்துக்குள் ஊடுருவிச் சென்று இரண்டு இடங்களைப் பிடித்துக் கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

## யுத்தம் தொடர்ந்துநடக்கும்

இஸ்ரேலுடன் தொடர்ந்து யுத்தம் நடைபெறும் என்றும் யுத்த நிறுத்தத்துக்கு இடமில்லையென்றும் எகிப்து அறிவித்திருக்கிறது. இஸ்ரேலை அராபியர் எதிர்த்துப் போரிடுவர். அராபியரின் கடைசித் துளி இரத்இருக்கும்வரை போர் ஓயாது என்று எகிப்துப் பத்திரிகையான 'அல்அஹ்ரம்' தெரிவித்தது.

## சவூதி அரேபியாவும் நிராகரித்தது

யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்ற ஐ. நா. பாதுகாப்பு சபையின் கோரிக்கையை சவூதி அரேபியாவும் இன்று நிராகரித்தது. யுத்த நிறுத்தத்துடன் இருதரப்பு படைகளும் பழைய நிலைகளுக்குத் திரும்பிச் செல்வதானுல் யுத்த நிறுத்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக டுனீஷியா தெரிவித்தது.

சூயல் கால்வாயைக் கைப்பற்றுவதாக இருந்தால் இஸ்ரேலியப் படைகள் இப்பொழுது சுலபமாக அதைக் கைப்பற்றிவிட முடியுமென்றும் ஆனுல் சூயஸ் கால்வாயைக் கைப்பற்றுவது தங்கள் நோக்கம் அல்லவென்றும் இஸ்ரேலிய பாதுகாப்பு மந்திரி ஜெனரல் டயான் தெரிவித்தார்.

காஸாதிப கற்பம் தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளிருப்பதாக இஸ்ரேல் தெரிவித்திருக்கிறது. ஆனுல் இதை கெய்ரோ ஊர்ஜிதம் செய்யவில்லை,

---

## மண்எண்ணை கிடைக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணத்தில் சிலர் மண்எண்ணையில் கொள்ளை இலாபம் அடிப்பதாகவும், சிலர் வேண்டுமென்றே மண்எண்ணைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது என்றும் தமது ஸ்தாபனத்தில் உரிய விலையில் தேவையான மண்எண்ணை கிடைக்குமென்றும் திரு. ஏ. ஜி இராஜசூரியர் தெரிவித்திருக்கிருர்.

## பிரதமர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரில் நடைபெறும் பொருட்காட்சிக்கும் அவர் விஜயம் செல்யலாம். ஒட்டாவாவுக்கும் சென்று அங்கு கனேடிய தலைவர்களை சந்திப்பார். பிறகு குவபெக் நகருக்கும் அவர் போகவிருக்கிருர். இம்மாதம் 19-ம் திகதியிலிருந்து 23-ந் திகதி வரை கனடாவில் பிரதமர் இருப்பார். அதன்பிறகு ஜப்பானுக்கு பிரதமர் விஜயம்செய்து அங்குள்ள ஆசியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார். 26-ம் திகதியிலிருந்து 30-ம் திகதிவரை ஜப்பானில் தங்கியபின் இலங்கை திரும்புவார்.

## ஆலயப் பிரவேச வழக்கு...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

வெளியேயும் கூடியிருந்தனர்.

நடராசா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நான் தொண்டமானுறு கெருடாவிலில் வசிக்கிறேன். வழக்காளியை எனக்குத் தெரியும். சம்பவம் நடந்த தினத்தன்று வழக்காளியான இலக்குணன் பாலுடனும் அர்ச்சனைச் சமான்களுடனும் ஆலயத்திற்குள் பிரவேசித்தார். அந்நேரத்தில் எதிரிகளாகிய தங்கவேலுஐயர், சிவசுப்பிரமணியஐயர் ஆகிய இருவரும் அவரை வெளியில் தள்ளிவிட்டனர். வெளியில் வந்தவுடன் அவரை நான் நடந்தவற்றைப்பற்றி விசாரித்தேன். அப்போது அந்நேரத்தில் அருகில் விசாகரத்தினம் சுந்தரலிங்கம் என்போரும் நின்றனர். கோயில் சுற்றுடலைச் சேர்ந்த சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வாலயத்திற்குள் உட்புகுவதில்லை. சைவசமய ஆசாரப்படி சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் ஆலயத்திற்குள் புகுந்தால் ஆசூசம் என்பார்கள். இவ்வாலயம் செட்டிமார் பரம்பரையாட்களுடையதுதான்என எனது பெற்றேருர் சொல்லக் கேள்வி. அத்துடன் செல்வச்சந்நிதி மலர் என்ற புத்தகத்திலும்வாசித்தறிந்தேன்.

எஸ். விசாகரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் இக் கோவிலுக்கருகாமையில் வசித்துவருகிறேன். நான் தொண்டமானுறு கிராம முன்னேற்றச் சங்கக் காரியதரிசியாகவும் கடமையாற்றிவருகிறேன். பல சாதி மக்களும், பலஇன மக்களும் இக்கோவிலுக்குள் செல்லுவது வழக்கம். வெள்ளைக்காரர்களும் இங்கு வந்துபோகிருர்கள், இங்கு ஜெர்மன் சுவாமி என்ற ஒருவரும் ஆச்சிரமத்துக்கருகாமைய்யில் நிரந்தரமாக வசித்துவருகிருர். கோவிலுக்கும் ஜெர்மன் சுவாமி இருக்கும் இடத்துக்குமுள்ள இடைவெளித்தூரம் 300 யார் இருக்கும். இக்கோவிலின் வள்ளியம்மை மண்டபமும் பிள்ளையார் மண்டபமும் இக்கோவிலுக்குச் சொந்தமில்லாதவர்களால் கட்டிக்கொடுக்கப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் தீர்ப்பை இம்மாதம் 24-ந் திகதிக்கு ஒத்தி வைத்தார்.